6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

59. மின்சக்தியை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிற மின்னாக்கிகளின் விற்பனையின்மீது யாதொரு வணிகரால் செலுத்த வேண்டிய விற்பனை வரி விகிதத்தை குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 8–12–2012 ஆம் நாளிட்ட 154 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

60. உயர் மின்னழுத்த நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படும் மின்னாக்கிகளில் பயன்படுத்தப்படும் எரிஉலை எண்ணெய் விற்பனையின் மீது யாதொரு வணிகரால் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 8–12–2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 155–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

61. (i) *1–3–2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்*–II, *பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின்* II*(2)/வ.வ.ப./90(*k*-3)/2011 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்து, அதற்குப் பதிலாக, யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள மாநில காவல் துறை கேண்டீன்களுக்கு யாதொரு பொருட்களின் (பெட்ரோல், டீசல், சிமிட்டி, மது பானங்கள் நீங்கலாக) விற்பனையின்மீது செலுத்த வேண்டிய வரியை, அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, விலக்களித்தது குறித்தும்;* (ii) *1–3–2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–*II, *பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின்* II*(2)/வ.வ.ப./90(*k*—4)/2011 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்து, அதற்குப் பதிலாக, அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள மாநில காவல் துறை கேண்டீன்களால் செலுத்த வேண்டிய வரியிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, விலக்களித்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 11–9–2012 ஆம் நாளிட்ட 121 ஆம் எண் அரசாணையில்*

வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். *[2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

78. மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)

79. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013–2014. (தமிழ்)

80. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013–2014. (தமிழ்)

******

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS